★ சுப்பர் ஸ்ரார்.. பாட்டா

தாரகைகளுள் ஒரு தாரகை சுப்பர் ஸ்ரார்...

ஒவ்வொரு இளைஞனும் யுவதியும் அணியக்கூடியது. கனடாவில் உருவாக்கப்பட்டது.

நகரில் கிடைக்குமிடம்...

சி. சின்னத்துரை அன் பிரதர்

யாழ்ப்பாணம் - போன் 284

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஆடி: 11 ஷஃபா: 20 இதழ்: 166

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27-7-7

சிட்டிசன்.... CITIZEN...

கைக்கடிகாரங்கள்...

ஆடவர், மகளிர் அனைவருக்கும் ஏற்ற டிசைன்கள்.

மேசை, சுவர் மணிக்கூடுகள்

நேரடி இறக்குமதியாளர்கள்

சி. சின்னத்துரை அன் பிரதர், யாழ்ப்பாணம் - போன் 284

குடியுரிமைரத்து சட்டத்தை எதிர்க்க

# கூட்டணியின் ஆதரவை சிறிமா கோரியுள்ளார்

## அமிரைசந்தித்துஆலோசனை

(கொழும்பு)

உள்ளூரராட்சி மன்றங்களின் நிர்வாகம் பற்றி ஆராய்ந்த ஆணைக் குழுக்களினல் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களின் குடியுரிமைகளை ரத்துச் செய்யும் சட்டமூலத்தை தேசிய அரசுப்பேரவையில் எதிர்ப்பதற்கு தம்முடன் ஒத்துழைக்கும்படி சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவர்கள் தமிழர் விடுதலைக்கூட்டணியைக் கேட்டிருக்கிறார்கள்-

உள்ளூராட்சி நிர்வாக ஊழல்கள்பற்றி ஆராய்ந்த ஆணைக்குழுக்கள் முன்னாள் உள்ளூராட்சி-நிதி-நீதி மந்திரி திரு. பலிக்கல டயஸ் பண்டாரநாயக்க, பிரதி அமைச்சர் திரு. நீல்டி அல்விஸ், முன்னாள் கொழும்பு மேயர் ஜனுப் பௌஸி ஆகியவர்கள் உட்பட 32 பேரைக் குற்றவாளிகளாகக் கண்டிருக்கின்றன.

மேற்கூறிய மூவரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மிகமுக்கிய பிரமுகர்களாவர்.

தேசிய அரசுப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குறித்த சட்ட மூலம் ஒரு பழிவாங்கல் நடவடிக்கையென சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஏற்கனவே கண்டனம் தெரிவித்துள்ளது. இச்சட்ட மூலத்தை மூர்த்தண்யமாக எதிர்ப்பதென அக்கட்சி முடிவு செய்திருக்கிறது. இதன் அடிப்படையிலேயே தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவையும் அது கோரியிருப்பதாகத் தெரிகின்றது.

தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்படி சட்டமூலத்தை தமிழர் விடுதலைகூட்டணியும் எதிர்க்கவேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும் உபதலைவர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவும் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயல் அதிபருமான திரு. அ. அமிர்தலிங்கத்திடம் நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கத்தை நேற்று முன்தினம் அவரது காரியாலயத்தில் சந்தித்தபோதே இவர்கள் இருவரும் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தனர்.

குடியுரிமை ரத்துச் சட்ட மூலத்தை எதிர்ப்பது என்று கூட்டணி ஏற்கனவே தீர்மானித்துள்ளதாகவும் நிச்சயம் அரசியல் பழிவாங்கல்செய்யும் இச்சட்டமூலத்தை கூட்டணி எதிர்த்தேதிரும் என்றும் திரு. அமிர்தலிங்கம் அவர்களிடம் தெரிவித்துள்ளார். (ம-இ)

அரசியல் திட்ட விவாதம்

## கூட்டணி பங்குபற்றுது

(கொழும்பு)

நேற்றுமுன்தினம் பிரதமமந்திரியினல் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசியல் அமைப்புச் சட்ட மூலம் மீதான விவாதம் ஆகஸ்ட் மாதம் 2ம் திகதி

[6-ம் பக்கம் பார்க்க]

இலங்கை-இந்திய

## ஒப்பந்த அமுல்பற்றி அதிகாரிகள் பேச்சு

புதுடில்லி, ஜூலை 26

1964ம் ஆண்டு இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட இலங்கையிலுள்ள இந்திய இனத்தவர்கள் தொடர்பான ஒப்பந்த அமுல்தொடர்பாக புதுடில்லியில் இருந்து இருநாடுகளின் அதிகாரிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. கடந்த ஏப்ரல் மாதம் இந்தியாவுக்கு இலங்கை வெளிநாட்டு அமைச்சர் விஜயம்செய்தபோது செய்து கொள்ளப்பட்ட ஒரு முடிவின் பிரகாரம் இந்தப் பேச்சுவார்த்தைகள் இப்போது ஆரம்பமாகியுள்ளன.

## தமிழரசுக்கழக பிரமுகர் மரணம்

சென்னை, ஜூலை 26

தமிழ்நாடு தமிழரசுக்கழகப் பிரமுகரும் சென்னை மாநகராட்சி மன்றத்தின் முன்னாள் உறுப்பினருமான பச்சிராஜ கோபால் காலமானார். அவருக்கு 55 வயது.

மதுரை மாநகராட்சி தேர்தல்:

## லொறிகளில் அ.தி.மு.க. தொண்டர்கள்: கருணாநிதி ஆட்சேபம் நிராகரிப்பு

சென்னை, ஜூலை 26

மதுரை மாநகராட்சிமன்ற தேர்தலில் இன்று 75 சதவீதமான வாக்குகள் பதிவாகியதாக அறிவிக்கப்பட்டது. வாக்குப்பதிவு பொதுவாக அமைதியாகவிருந்ததென்று விசேஷ தேர்தல் அதிகாரி திரு. பாலசுப்பிரமணியம் அறிவித்தார்.

வாக்காளர்களை லொறி

(2-ம் பக்கம் பார்க்க)

சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார்

## நூற்றாண்டுவிழா ஆகஸ்ட் 9-ந்திகதி

(யாழ்ப்பாணம்)

சைவப் பெரியார் சிவபாதசுந்தரனாரின் நூற்றாண்டு விழாவை அடுத்த மாதம் 9ந் திகதி கொண்டாடுவதென்று சைவப் பெரியார் நூற்றாண்டு விழாச்சபை தீர்மானித்துள்ளது. சபைத் தலைவர் திரு. ச. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது:

இம்மாதம் 31ந் திகதி பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும் என்பதால் இவ்விழா அடுத்த மாதத்திற்குப் பின்போடப்பட்டது.

ஆடி அத்தமான அடுத்த மாதம் 9ந் திகதி புதன்கிழமை காலை விழாவின் முன்னேடியாகப் பெரியாரின் குருபூசையும், நினைவுவிழாவும் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் நடைபெறும். ஆடிச் சுவாதியும், குருபூசைத் தினமுமான அடுத்த நாள் வியாழக்கிழமை திருக்கேதீஸ்வரத்தில் நடேசர் அபிஷேகமும் அதைத் தொடர்ந்து பெரியார் நினைவு விழாவும் நடைபெறும்.

ஆகஸ்ட் 13ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பெரியாரின் பிறந்த ஊரான கந்தவனக்கடவை ஆலயத்தில் சுப்பிரமணியப்பெருமானுக்கு அபிஷேகமும், மாலை பொதுக் கூட்டமும் நடைபெறும்.

பொதுச்சபைக் கூட்டத்தில் இவ்வொழுங்குகள் பற்றித் தீர்மானிக்கப்பட்டன.

பாடசாலைகளில் நடை

[6ம் பக்கம் பார்க்க]

உலகின் முதலாவது

## 'குழாய்' குழந்தை சுகமாக இருக்கிறது

### பரிசோதனை வெற்றி

லண்டன், ஜூலை 26

பரிசோதனைக் குழாய் ஒன்றில் கருத்தரித்து ஆங்கிலப் பெண்மணி ஒருவரின்வயிற்றில்வளர்ந்து வந்த பெண் குழந்தை நேற்று இரவு லண்டன் ஆஸ்பத்திரியில் பிறந்தது.

கடந்த இரவு பிறந்து, வைத்திய உலகில் புதிய சகாப்தம் ஒன்றை உருவாக்கிய இப்பெண் குழந்தையும் தாயும் மிகவும் ஆரோக்கியத்துடன் இருக்கின்றனர் என டாக்டர்கள் தெரிவித்தனர்,

திருமதி லெஸ்லி பிரவுண் என்ற அப்பெண் சத்திர சிகிச்சையின் மூலம் 5 ருத்தல் 12 அவுன்ஸ் நிறையுள்ள இக்குழந்தையைப் பெற்றெடுத்தார்.

ரயில்வே ஊழியரான திரு. பிரவுணும் திருமதி லெஸ்லி பிரவுணும் கடந்த 9 வருடங்களாக குழந்தைப் பேறு இல்லாமல் இருந்தனர்.

நீண்டகால ஆராய்ச்சியின் பின்னர் பிரசவ வைத்திய நிபுணர்களான டாக்டர் பட்றிஸ் ஸ்டெப்டோவும், டாக்டர் ரூபேர்ட் எட்வேர்ட்ஸும் மேற்கொண்ட முயற்சி

(2-ம் பக்கம் பார்க்க)

தமிழ்நாட்டில் சாதிக்கலவரம்:

## ஒன்பது பேர் படுகொலை! குடில்கள் கடைகள் நாசம்

சென்னை, ஜூலை 29

தமிழ்நாட்டில்விழுப்புரம் பகுதியில் ஏற்பட்ட சாதிக் கலவரத்தில் 9 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மரக்கறி விற்பனை செய்யும் உயர்சாதிக்காரர் ஒருவருக்கும் அரிசன பெண் ஒருவருக்குமிடையில் ஏற்பட்ட சிறுதகராறு பெரும் கலவரமாக உருவெடுத்துள்ளது.

கடந்த இரு தினங்களாக இங்கு பயங்கர விதத்தில் இருசமூகத் தலைவர்களும் மோதிக்கொண்டார்களாம்.

அரிசனமக்களின் பல குடில்கள் எரிக்கப்பட்டுள்ளன, கடைகள் பலவும் நாசமாக்கப்பட்டுள்ளன.

கொல்லப்பட்டவர்களில் ஆறு பேரின் சடலங்கள் ஏரியொன்றில் போடப்பட்டு மற்றைய 3 சடலங்களும் வாய்க்காய் ஒன்றில் கண்டெடுக்கப்பட்டன.

விழுப்புரம் பகுதியில் 144 தடைச்சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது. 200க்கும் மேற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். சென்னை, செங்கல்பட்டு போன்ற இடங்களிலிருந்தும் மேலதிகமாக பொலிசார் அங்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

## வரி விளம்பரம்

### தேவை

சுண்டிக்குளிப் பகுதியில் ஒருவீடு அல்லது இரண்டு பரப்பு வீடு கட்டுவதற்குரிய காணி வாங்குவதற்கு தேவைப் படுகின்றது. ஆ. விவேகானந்தா 71, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 9891

### தவறிவிட்டது

ஒரு கார் சில்லு பருத்தித்துறை றேட்டில், முத்திரைச் சந்தைக்கும், பஸ் நிலையத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் சில்லை டாக்டர் சேனாதிராசா மின்சார நிலைய வீதியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 9893

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற பொலிகண்டி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வைரவிப்பிள்ளை காசிநாதன் என்பவரின் மரண சாதனத்தின் சொத்தின் விடயத்தில் - மரணமெய்தியவர்

வி. காசிநாதன் கைம்பெண் வள்ளியம்மாள்,
126, 2-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம்
இல: ரி/3383

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 8-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி.

பொ. பாக்கியநாதன்
(ஒப்பம்)
பதிவாளர்.

1978-ம் ஆண்டு ஆடி மாதம் 13-ந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

C. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி,
யாழ்ப்பாணம்.
9889

### மு. மு. மன்ஸூர்

மனுதாரின் பதிவுபெற்ற தரணி

### பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

இல. 84 அ-பிரிவுகள் 524,532

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் இல: 82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னுமிடத்தைச் சேர்ந்தவரான காலஞ்சென்ற முகம்மது சுல்தான் முகம்மது மீராப்பிள்ளை என்பவரின் மரண சாதனத்தின் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவா,

இல: 82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னுமிடத்தைச் சேர்ந்தவரான முகம்மது சுல்தான் முகம்மது மீராப்பிள்ளை கைம்பெண் சபுறு உம்மா.

மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம்
இல. 3342/ரி

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக/ மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1978 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 11 ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
(ஒப்பம்)

பொ. பாக்கியநாதன்.
பதிவாளர்.

1978 ஆம் ஆண்டு ஆடி மாதம் 17 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
9896

### மதுரை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

களில் ஏற்றிச்செல்வது சட்டத்துக்கு விரோதமாகவிருந்தும் அ. இ. அ. அ. தி. மு. கழகத்தொண்டர்கள் வாக்காளர்களை லொறிகளில் ஏற்றிச் சென்றார்கள் என தி. மு. கழக தலைவர் திரு. மு. கருணாநிதி பொலிஸ் மேலிடத்துக்கு தந்திமூலம் அறிவித்திருந்தார். ஆனால் இந்தத் தகவல் தவறானது என பொலிசார் அறிவித்துள்ளனர்.

வாக்குப் பதிவுகள் இன்று காலை 517 சாவடிகளில் ஆரம்பமாயின.

மாநகராட்சி மன்றமாக இருந்து 71ம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்டதன் பின்னர் நடைபெறும் முதலாவது மிக முக்கியமான தேர்தல் இதுவாகும்.

இத்தேர்தலில் 65 தொகுதிகளில் 426 பேர் போட்டியிகின்றனர்.

# அல்வாய் நகை திருட்டுவழக்கு
# 32 தங்கப்பவுண்
## கோர்ட்டில் ஒப்படைப்பு!
### சந்தேகநபர்களுக்குப் பிணை

(யாழ்ப்பாணம்)

அல்வாய் நகைக் கொள்ளை வழக்கில் சந்தேக நபர்களான கோபாலகிருஷ்ணன், சச்சிதானந்தன் ஆகியோர் தலா 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

யாழ். விசேஷ துப்புத் துலக்கும் பிரிவு சார்ஜன்ட் கபிரியல் பிள்ளை, சந்தேகநபர் ஒருவரின் வீட்டில் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் உருக்கப்பட்ட நிலையிலுள்ளதும், நகைகளாக உள்ளதுமான 32 தங்கப் பவுண்களை கோர்ட்டில் ஒப்படைத்தார்.

றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் இருவரும் கோர்ட்டில் ஆஜரானார்கள்.

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சந்தேக நபர்களைப் பிணையில் விடுமாறு கோரினார்.

நீதிபதி சந்தேக நபர்களைப் பிணையில் செல்லஅனுமதித்து, யாழ். விசேட துப்புத்துலக்கும் பிரிவுப் பொறுப்பதிகாரியை, தேவையானபோது சந்தேக நபர்கள் சந்திக்கவேண்டுமென்றும் தெரிவித்தார்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த துரைராஜா கமலாதேவி என்பவர் 21,000 ரூபா பெறுமதியான தங்கநகைகள் திருடப்பட்டதாக, பொலிசில் புகார் செய்ததைத் தொடர்ந்து யாழ். விசேஷ துப்புத்துலக்கும் பிரிவினர் சந்தேக நபர்களைக் கைதுசெய்ததுடன், திருட்டுப் போன நகைகளையும் மீட்டனர். (க-உ)

## பாடசாலைகள் அபிவிருத்தி
### எம். பி. நிதிஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நவீனவசதிகளடங்கிய விஞ்ஞானகூடம் ஒன்றை நிறுவுவதற்கு வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தில் 70 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

மேலும் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாசாலைக்குப் புதிய வகுப்பறை மண்டபம் அமைப்பதற்கு 30 ஆயிரம் ரூபாவை திரு. திருநாவுக்கரசு ஒதுக்கியுள்ளார்.

இதைவிடவட்டுக்கோட்டை தொகுதியிலுள்ள சுமார் 14 பாடசாலைகளில் மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மொத்தமாக 40 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (உ)

# இன்று நினைவுதினம்
# மக்கள் மேயர்
## அல்பிரட் துரையப்பா

தமது வாழ்க்கைப் பாதையிலே, தாம் சாதித்த அரும் பெரும் சாதனைகளால் மாத்திரமல்ல, தமது மரணத்திலும் மரணத்தின் பின்னும் மக்களின் மன எழுச்சிகளிலும் சிந்தனையோட்டங்களிலும், ஒன்றாகக் கலந்து துடித்துக்கொண்டிருக்கும் ஓர் அபூர்வ ஒலி 'துரையப்பா,

ஏழை- செல்வன் என்ற வேறுபாடின்றி மனிதாபிமானத்தையே தமது இலட்சியமாகக்கொண்டு, வறியவர்களுக்காகவும், வசதியற்றவர் கல்லூரியிலே தனது உயர் கல்வியை முடித்தார். சுதந்திரமாகத் தொழில் ஆற்றிப் பொதுநலசேவை புரியவேண்டுமென்ற உயரிய நோக்குடன், சட்டக் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்றுத் தமது 22-வது வயதிலேயே சட்டத்தரணியாக வெளிவந்து, சுதந்திரமாக யாழ். நகரைச் சுற்ற ஆரம்பித்தார். அவ்வாலிப வயதிலேயே ஏழை மக்களின் துன்பங்களைக்கண்டு குமுறிய அவர், ஏழைகளின் சட்டத்தரணியாக ஊதியம் எதையும் எதிர்பார்க்காது தொழில்

### -- வி. எல். எஸ். நாதன் --

களுக்காகவும் இரக்க உணர்வு கொண்டு, எந்நேரமும் அவர்களையே சுற்றிச் சுற்றி அவர்களோடு பின்னிப் பிணைந்து மறைந்த ஒரு தியாக ஆத்மாவின் நினைவுதினம் இன்று.

மக்கள் மேயர் என அழைக்கப்பட்ட திரு. துரையப்பா, யாழ். நகரிலே பிறந்து, யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பக் கல்விக்காகப் பிரவேசித்து, யாழ். பரியோவான் செய்யத் தொடங்கினார். அன்று தொட்டுத் தான் மரணத்தைத் தழுவும்வரையில் இலவசமாகவே மக்களுக்குப் பணியாற்றினார்.

யாழ். மாநகர திடீர் மரண விசாரணை அதிகாரியாகப் பல காலம் தொழில் புரிந்த திரு. துரையப்பா, ஒரு சமாதான நீதிபதியாகவும், உத்தியோகப் பற்றற்ற நீதிபதியாகவும்

(மே பக்கம் பார்க்க)

# மாவட்ட அமைச்சர் பதவிகளை ஏற்கக் கூடாது
## கூட்டணி மகாநாட்டுக்கு பிரேரணைவருகிறது

(பண்டத்தரிப்பு)

''அரசாங்கம் வழங்கும் மாவட்ட அமைச்சர் பதவிகளைத் தமிழர் விடுதலைக்கூட்டணி ஏற்றுக்கொள்ளக் கூடாது''.

இவ்வாறு கோரும் முக்கிய தீர்மானமொன்று ஆவரங்காலில் நடைபெறும் தமிழர்விடுதலைக் கூட்டணியின் தேசிய மாநாட்டில் சமர்ப்பிக்கப்படுவதற்காக வட்டுக் கோட்டைத்தொகுதி தமிழர் விடுதலைக்கூட்டணி மத்திய குழுவின் விசேஷபொதுக் கூட்டத்தில் ஏகமனதாகநிறைவேற்றப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டைத்தொகுதி எம். பி. திரு, ரி. திருநாவுக்கரசு தலைமையில்சித்தன்கேணியிலுள்ள கூட்டணி மத்திய அலுவலகமண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொகுதியிலுள்ள 15 கிளைகளிலிருந்தும் பெருந்தொகையான பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள இதர முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கத்தவராக இருந்து கொண்டு கூட்டணியின்கொள்கைகளுக்கு மாறாக நடப்பவர்கள் கூட்டணியிலிருந்து உடனடியாக வெளியேற்றப் படவேண்டும்.

''தொகுதிதோறும் படித்த வேலையற்ற தமிழ் இளைஞர்களுக்கு வடக்கு, கிழக்குமாகாணங்களிலுள்ள முடிக்குரிய காணிகளை தலா ஒரு ஏக்கர் வீதம் விவசாயத்திற்குபகிர்ந்து அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்''.

யைச் சேர்ந்த கே. குகதாசன் என்னும் மாணவனும் பங்கு கொண்டு ஐயாயிரம் மீற்றர் தூரத்தையும் ஓடி முடித்து 5வது இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இப்போட்டியை நேரில் பார்த்த எம். பி. இவ்வீரனைப் பாராட்டி சொந்தப்பணத்திலிருந்து நூறுரூபாவை பரிசாக வழங்கினார். (இ)

## மகஜர்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அபிவிருத்தி வேலைகள், தேவைகள்பற்றி பெற்றோர் ஆசிரியர் சங்கத்தால் வட பகுதி கல்விப் பணிப்பாளர் திரு. ரி. மாணிக்கவாசகருக்கும், கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளைக்கும் மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (உ)

## மானிப்பாய் வாசி தேடப்படுகிறார்

(கொகுவலை)

வழக்கு ஒன்று தொடர்பாக பாலகிருஷ்ணன் என்ற மானிப்பாய் வாசி கொகுவலை பொலிசாரால் தேடப்பட்டு வருகிறார். (உ)


யாழ்ப்பாண மாநகர
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரைவுள்ளது)

### கிறே பப்ளின் கேள்வி விண்ணப்பம்

எமது சங்க மின்தறி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் கிறே பப்ளின் (Grey Poplin) கேள்வி மூலம் விற்பனைக்குண்டு.

முடிவுத் திகதி:- 03-08-'78

மேலதிக விபரங்களை சங்க தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்.

74/3, அல்விரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்,
1978 யூலை 26. 9897


## மரண அறிவித்தல்
### சபாநாயகம்

மயில்வாகனம் சபாநாயகம் (சபா) காலமானார். கமலாவின் அன்புக் கணவரும், நிரஞ்சன், சுதர்மன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேசன் அவர்களின் சகோதரரும், திருமதி எஸ். பாலசிங்கத்தின் மருமகனும், லீலா சிவப்பிரகாசபிள்ளை, மகேஸ் நடராசா, சாவித்திரி மகேசன், மகிந்த, இந்திரபிள்ளை, சித்திரபிள்ளை ஆகியோரின் மைத்துனரும், நீர்ப்பாசனத் திணைக்களம், வோக்கஸ் அன்ட் சன்ஸ் லிமிட்டெட் முன்னாள் பொறியியலாளரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நைஜீரியாவில் நடைபெறும்.

அறிவிப்பவர்: B. மகிந்தா, மகாராஜா ஆகர்நைசேசன்,
9894 (38 21, கவர் வீதி, கொழும்பு-5)

ஈழநாடு
The Eelanaadu

## நான்கு துறைமுகங்கள்

கொழும்பு, திருக்கோணமலை, காங்கேசன்துறை, காலி ஆகிய நான்கு துறைமுகங்களும் ஆசியாவிலேயே மிகச் சிறந்த துறைமுகங்களாக நவீன வசதிகளுடன் திருத்தி அமைக்கப்படும் என்றும் இதற்கான முழுச் செலவையும் ஜப்பான் ஏற்றுக் கொள்ளுமென்றும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தெரிவிததிருக்கும் செய்தி நாட்டின் முன்னேற்றத்தில் ஆர்வமுள்ள அனைவருக்கும் மகிழ்ச்சியளிப்பதாகும்.

கொழும்புத் துறைமுகம் பல வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படவில்லை, சுதந்திர வர்த்தக வலயம் உருவாக்கப்படவிருப்பதால் கொழும்புத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது அவசியமாகிவிட்டது.

திருக்கோணமலை இயற்கைத் துறைமுகம். ஆயினும் ஏற்றுமதி இறக்குமதிக்கு வசதியாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். கொழும்புத் துறைமுகத்தில் அடிக்கடி வேலை நிறுத்தங்கள் நடைபெற்றபோது கப்பல்கள் பலவும் திருக்கோணமலைத் துறைமுகத்துக்கே திருப்பிவிடப்பட்டன. கொழும்புத் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த தேயிலைகூடத் திருமலைத் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வந்திருக்கிறது.

காங்கேசன்துறைக்கும் காலிக்கும் சில சமயங்களில் உணவுக்கப்பல்கள் திருப்பிவிடப்படுகின்றன. இத்துறைமுகங்களில் இறக்குமதி ஏற்றுமதி வேலைகள் மிகத் துரிதமாக நடைபெறுவதுண்டு.

காங்கேசன்துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்து வருகிறது.

காங்கேசன்துறைத்துறைமுக விருத்திக்காக முன்னர் திரு. சு. நடேசபிள்ளை காங்கேசன்துறைப் பிரதிநிதியாக இருந்தபோது வரவு-செலவுத் திட்டத்தில் பத்து ரூபாய் அடையாளமான்யமாக ஒதுக்கப்பட்டது. இந்தப் பத்துரூபாய் அடையாள மான்யம் தொடர்ந்து சில வருடங்களாக வரவு - செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுவந்தது.

பின்னர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையில் ஐக்கியமுன்னணி அரசாங்கம் 1970ம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தபோது காங்கேசன்துறைத் துறைமுகம் நிச்சயம் அபிவிருத்தி செய்யப்படும் என்று அப்போது விடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சராகஇருந்த திரு. பீட்டர் கெனமன் யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் உறுதியளித்தார்.

ஆயினும்காங்கேசன்துறைத் துறைத்துறைமுகம் அதே நிலையில்தான் இன்னமும் இருக்கிறது.

இந்தியாவில் சேதுசமுத்திரத்திட்டம் பூர்த்தியடைந்ததும் காங்கேசன் துறைத்துறைமுகத்தின் அவசியம் உணரப்படும்.

எனவே கொழும்பு, திருக்கோணமலை, காலி, காங்கேசன்துறை ஆகிய நான்கு துறைமுகங்களும் அபிவிருத்தி செய்யப்படவிருப்பது நமது நாட்டின் எதிர்காலம் சுபிட்சமுடையதாக இருக்கும் என்பதற்கு நல்ல அறிகுறி.

இத்துறைமுகங்களை அபிவிருத்தி செய்து தருவதற்கு முன்வந்துள்ள ஜப்பானியர் என்றென்றும் இலங்கையரின் நன்றிக்குரியவர்களாவர்.

---

## "பணம் படைத்தவர்கள்

# தமிழ்மண்ணிலேயே மூலதனத்தை பயன்படுத்த வேண்டும்"

(மாவிட்டபுரம்)

"நமது தமிழ்ப்பகுதிகளின் பொருளாதார வளத்திற்கு உதவ நம்மத்தியிலுள்ள பணம் படைத்தவர்கள் முன்வர வேண்டும். தென்னிலங்கையில் மூலதனங்களிடுவதை விடுத்து தமிழ்ப்பகுதிகளின் மூலதனங்களையிட்டு தமிழ்ப் பகுதிகளின் பொருளாதார விருத்திக்கும், அதே நேரத்தில் தமிழ்மக்கள் மத்தியிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும் முன்வரவேண்டும்."

இவ்வாறு மாவிட்டபுரம் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள தொழில் ஸ்தாபனம் ஒன்றைச் சம்பிரதாய முறைப்படி திறந்துவைத்துப்பேசிய எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறை எம். பி.யுமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:- "இன்றுள்ள நிலையில் நாம் எமக்கென தனியானதொரு அமைப்பை நாடிச் சென்றுகொண்டிருக்கின்றோம். இந்நிலையில் தனியானதோர் அமைப்பின்கீழ் எமது தமிழ்ப்பகுதிகள் வாழுமா? வாழாதா? என்ற சர்ச்சைகளும் எழுப்பப்படுகின்றன. ஆகவே எமது சொந்தக்காலில் நாம் நிற்கும் வகையில் எமது பகுதிகளை அபிவிருத்திசெய்ய வேண்டும்.

'இந்த வகையில் இந்தஸ்தாபனத்தார் செய்யும் சேவை போற்றத்தக்கது. தமிழ்ப்பகுதிகளில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட வல்லைநெசவாலையில் கூடுதல் பங்குதாரர்களாக இருந்து அதை முன்னேற்றி வருவதுடன் தமிழ்ப் பகுதிகள் தோறும் மூலதனங்களையிட்டு தொழில் ஸ்தாபனங்களை ஆரம்பிப்பதன் மூலம் தமிழ்ப் பகுதிகளின் பொருளாதார விருத்திக்கும் தமிழ் இளைஞர்களதும் மகளிரதும் வேலையில்லாப் பிரச்னைக்கும் வழி சமைப்பதையிட்டு நாம் பெரிதும் வாழ்த்துகிறோம்.

'தொழில் ஸ்தாபனங்கள் சிறப்புற இயங்க வேண்டுமானால் முதலாளி தொழிலாளி உறவு சுமுகமாக இருக்கவேண்டும். தொழிலாளிகள் தமது சொத்துப் போல் ஸ்தாபனங்களை மதிக்கவேண்டும். தமது உழைப்பையும், ஊதியத்தையும் கருத்தில் கொள்ளாது தொழில்விருத்திக்கு உழைக்க வேண்டும்" என்றார்.

மற்றும் திருமதி மங்கையாக்கரசி அமிர்தலிங்கம் உட்பட பலர் பேசினர். (உ)

---

## "விடுதலைக்குப் போராடும் இனத்தில்

# தீண்டத்தகாதவர் என்ற பிரிவு இருக்கக்கூடாது"

## 'அமிர்' வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

"ஆட்சியினர் வலதுசாரிப் போக்கில் நடைபோடுகின்ற அதேவேளையில் சர்வாதிகாரப் போக்கினையும் பின்பற்றுகிறார்கள். ஆட்சியினரின் சர்வாதிகாரப்போக்கிற்கு எதிராக தென்னிலங்கையில் புரட்சிகர சக்தியொன்று அணிதிரள்கிறது. இந்நிலையில் அரசியல் நிலை என்னாகுமோ தெரியாது. மாற்றங்கள் பலஏற்படலாம். அம்மாற்றங்களை தமிழினம் தமது பிரச்னைகளைத் தீர்க்கப் பயன்படுத்தமுடியும்."

தேவரையாளி இந்துக்கல்லூரியின் 26ம் ஆண்டு பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அதிபர் திரு. எம். எஸ். சீனித்தம்பிதலைமையில் நடந்த இவ்விழாவில் திரு.அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது: விடுதலைக்கு போராடும் எந்தச் சமூகமும் தமக்குள் ஒரு பிரிவினரை தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கிவருவது நீதியாகாது. இதுவிடுதலைப்போராட்டத்தின் படுதோல்விக்கு வழி வகுக்குமென்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

எந்தவொரு சமூகத்தின்வளர்ச்சியும் அச்சமூகத்திலுள்ள சிறுசிறு குழுக்களின் வளர்ச்சியிலே தங்கியுள்ளது. சங்கிலியின் பலம் அதன் கொளுக்கியில் இருப்பதுபோல சிறுசிறு குழுக்களின் ஒற்றுமையிலும் இணைப்பிலுமே சமூகத்தின் பலம் தங்கியுள்ளது.

### தமிழினத்தின் விடுதலை

தமிழினத்தின் விடுதலையை யாவரும் எதிர்பார்த்த வண்ணம் உள்ளார்கள். அத்தியாவசியமான தொன்றுகவும் விடுதலை கருதப்பட்டு வருகின்றது. இந்நிலையில் எமக்குள் புரையோடிக் கொண்டிருக்கும் திண்டாமையை அகற்றுமல் ஆள்வோரிடம் எந்த முகத்துடன் நீதி கோரமுடியும் என்ற கருத்தை நான் ஆதரிக்கின்றேன். ஆள்வோர் எமக்குள் உள்ள இத் திண்டாமையைச் சுட்டிக்காட்டி வருகின்றார்கள். நபம் அவற்றை மறுப்பதுடன் திண்டாமை ஒழிந்துவிடாது. பதிலாக சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களின் வளர்ச்சிக்சாக புதுப் புது செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தல் வேண்டும்.

### ஜீவமரணப் போராட்டம்

தமிழினம் தமது பிரச்னைகளுக்கு ஆள்வோரை மட்டும் நம்பியிருக்க முடியாது. ஜீவமரணப் போராட்டங்களை நடாத்த வேண்டியும் ஏற்படும். இந்த ஜீவமரணப் போராட்டத்தில் எமக்குள் உயர்வு தாழ்வு இருக்கக் கூடாது. யார் யார் எமது இயக்கத்தை வெறுத்தாலும் திண்டாமையை ஒழிக்கவும் உயர்வு தாழ்வை அகற்றவும் நாம் தயாராகியுள்ளோம். இந்நிலைமை அரசியலில் எம்மை பின்னுக்குக் கொண்டு சென்றாலும் நாம் கவலைப்படப் போவதில்லை என்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூறவிரும்புகின்றேன்.

எமது தமிழினத்தின் ஒரு பிரிவிலுள்ள இளைஞர்களும் மாணவர்களும் விரக்தி அடையாமல் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்து ஏங்காமலும் இருக்க வைப்பது நமது கடமையாகும்,

நாம் எமது இனத்தினைப் பற்றிச்சிந்தித்து வரும் அதே வேளையில் ஆட்சியாளரின் போக்கினையும் நாம் அறிந்து வருதல் அத்தியாவசியமாகும். ஏனெனில் தென்னிலங்கையில் வீசக்கூடிய அரசியல் புயல் இங்கும் வீசலாம். அதனல் தமிழ் மக்கள் தென்னிலங்கை அரசியலையும் ஆட்சியாளரின் போக்கினையும் உற்று அவதானித்துவரல் வேண்டும்.

மாணவர்கள் இரட்டை மனதுடன் வாழ விடாது நாம் தமிழர், நாம் வாழும் நாடு எமது நாடு என்ற உணர்வோடு வளரவேண்டும். அதற்கான பயிற்சியை ஆசிரியர் உலகம் மாணவர்களுக்கு அளிக்கவேண்டும்". (கஉ)

---

### மணிவாக்கு

உன்னிடம் வேலை பார்த்த வேலைக்காரனின் வியர்வை உலர்வதற்கு முன் அவனுக்குக் கொடுக்க வேண்டிய கூலியைக் கொடு.

- நபிகள்நாயகம்

---

## பாடசாலை இல்லாக்குறை நீங்குகிறது

(விசுவமடு)

நீண்ட காலமாக விசுவமடு கிராமத்திற்கு ஒரு பாடசாலை இல்லாதிருந்துவரும் குறைபாடு வெகு விரைவில் முல்லைத்தீவு தேசியப் பேரவை உறுப்பினர் திரு. சே. மா. செல்லத்தம்புவின் முயற்சியால் நீங்குகிறது.

மூன்றுவது பருவகால ஆரம்பத்தில் புதிய பாடசாலை ஆரம்பிக்கப்படும் என கல்வித் திணைக்களம் பேரவை உறுப்பினருக்கு அறிவித்துள்ளது. வவனியா மாவட்ட பிரதம கல்வியதிகாரி திரு. சிமியாம் பிள்ளை புதிய பாடசாலைக்கான கட்டிடத்தை அடுத்த வாரம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்பார். (உ)

---

### நாடக படம்

மல்லாகத்திலிருந்து திரைப்பட ரசிகர் ஒருவர் எழுதிய தபால் அட்டையில் ஒரு பகுதியை நீக்கிவிட்டு மிகுதியை இங்கு தருகிறேன்.

இதுவரை காலமும் இலங்கையில் முதலில் திரையிடப்பட்ட படங்களில் கொழும்புடன் யாழ்ப்பாணமும் சமமாகநின்றது. ஆனால்'தெய்வம் தந்த வீடு'' படம்மட்டும் யாழ்ப்பாணத்தைப் புறக்கணித்து கொழும்பு மக்களுக்கு முதலில் தரிசனம் தந்தது யாழ். மக்களை அவமதிப்பதைப்போல்உள்ளது. அநேக மக்களின் வேண்டுகோளின் பேரில் யாழ்ப்பாணத்தில் திரையிடுகின்றனராம். இலங்கைப் படத்துக்கு ஆதரவு கொடுத்துவருவதில் யாழ். மக்கள் முன்னணியில் நின்றும் இப்படம் யாழ்ப்பாணத்தை இரண்டாம்தரத்தில் கொண்டு வந்தது யாழ். மக்களுக்குப் பெரும் மனவருத்தத்தை உண்டுபண்ணியுள்ளது.

0 0 0

இதுமட்டுமல்ல; இந்தப் படத்தின் விளம்பரங்களிலும் பாரபட்சம் காட்டப்படுகிறதென்பது இங்குள்ள பலரின் குறைபாடு.

படத்தில் கதாநாயகியாக வரும் புதுமுகம் குமுதினியையும் மற்றும் சில யாழ்ப்பாணக் கலைஞர்களையும் இருட்டடிப்புச் செய்வதாகவும் பலர் புகார் கூறுகின்றனர்.

படம் யாழ்ப்பாணத்தில் திரையிடப்பட்டதும் பார்த்தால் தெரிந்துவிடும் நிலைமை!

0 0 0

சென்றவார இறுதியில் இளவாலை சென்ஹென்றீஸ் கல்லூரியில் நடந்த நாடக அரங்கக் கல்லூரியின் கருத்தரங்கில் மல்லிகை ஜீவா பேசுகையில் நாடகக் குழுக்கள் பற்றிக் குறிப்பிடுகையில் யாழ்ப்பாணத்திலிருந்து உத்தியோகம் பார்ப்பதற்காக கொழும்புக்குச் சென்றவர்கள் வெள்ளவத்தையில் நாடகக் குழு அமைத்துக் கொண்டு வானொலியிலும் ஆதிக்சம் செலுத்துகிறார்கள் என்றும் இதேபோல் கொட்டாஞ்சேனைக்குழு, கலாநிதிகள் குழு என்று கோஷ்டி சேர்த்துக்கொள்வதால் திறமையான கலைஞர்கள் பிரகாசிக்க முடியாதிருப்பதாகச் சொன்னர்.

ஈழத்தில் இப்பொழுதுதான் தலைதூக்கிவரும் தமிழ் சினிமாவிலும் இப்படிக் குழுக்கள் அமைத்துக்கொள்வது தமிழ் சினிமா வளர்ச்சிக்கு நல்லதல்ல.

-ஊர்சுற்றி.

---

## புத்தூரில் மரம்நாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் மரம்நாட்டுவிழா நடைபெற்றது. விழா மேற்படி கல்லூரி அதிபர் திரு. சு. கனகராசாவினல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொடர்ந்து சேவைக்கால விஞ்ஞான ஆலோசகர் திரு. ஐ. ஜெகநாதனும், கல்லூரி விவசாய ஆசிரியர் திரு. ஆ.பஞ்சாட்சரநாதனும், கனிஷ்ட அதிபர் திரு. ந. க. செல்லத்துரையும், திரு. வை. தியாகராசா, திரு. பொ. ஜெகநாதன், திரு. த. விசுவலிங்கம் முறையே மகோகனி, சஞ்சீவ், சவுக்கமரம், பலாமரம், கொய்யாமரம் முதலியவற்றை சம்பிரதாய முறைப்படி நாட்டினர். பழைய மாணவர் சார்பில் திரு. தபாலரத்தினசிங்கமும், பெற்றோர் சார்பில் திரு. சி. கனகராயரும் சமூகமளித்து மரங்களை நாட்டினர். (உ)

## வடஇந்திய வெள்ளப் பெருக்கு

# ஒருகோடி மக்கள் பாதிப்பு: 200 பேர் பலி!

## போர்க்கால அடிப்படையில் நிவாரணம்

புதுடில்லி, ஜூலை, 26

வட இந்திய மாநிலங்களில் வெள்ள நிலைமை மிகவும் மோசமடைந்துவருகிறது என்றும் இதுவரை 200 பேர் வரை வெள்ளப் பெருக்கினுல் பலியாகியுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கோடி மக்கள் இவ் வெள்ளப் பெருக்கினுல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இம்மாநிலங்களில் பலத்த மழை தொடர்ந்து பெய்துவருகிறது.

போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகளும் நிவாரண வேலைகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (இ)

## புதிய பஸ் சேவை

(விசுவமடு)

காரைநகர் இ. போ. ச. டிப்போ விசுவமடுக் குளம் வரையும் ஒரு புதிய பஸ் சேவையை சென்றவாரம்ஆரம்பித்துள்ளது.

இச்சேவை காரைநகரில் இருந்து காலை 9 மணிக்குப் புறப்பட்டு விசுவமடுவிற்கு 1 மணிக்குச் சென்று 2-30க்கு விசுவமடுவில் இருந்து காரைநகர் செல்லும் இச்சேவை முல்லைத்தீவு தேசியப்பேரவை உறுப்பினர் திரு. சே. மா. செல்லத்தம்புவின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சென்ற வருடம் யாழ் அரசாங்க அதிபரிடம், விவசாயிகள் ஒரு புதிய பஸ்சேவையை ஆரம்பிக்கும்படி கோரியிருந்தனர். இச்சேவை விசுவமடுக் குளத்திற்கு அண்மையில் உள்ள மக்களுக்குப் பெரும் நன்மை பயக்கும். (உ)

### "கமத்தொழில் போன்று

## மீன்பிடித் தொழிலுக்கும் கடன்கள் வழங்க வேண்டும்"

### பரு. எம். பி. கோரிக்கை

நெல்லியடி, செவ்.

"கமத்தொழில் வளர்ந்து வரும் அளவுக்கு மீன்பிடித் தொழில் வளர்ச்சிபடையாதது கவலைக்குரியதாகும். அதற்குக் காரணம் மீன்பிடிக் கூட்டுறவுச்சங்க நிர்வாகங்கள் சரிவர இயங்காமையேயாகும்"

மேற்கண்டவாறு பருத்தித்துறை தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. க. துரைரத்தினம், பருத்தித்துறை கடற்றெழிலாளர் கூட்டுறவுச் த்ங்கத்தினரால் வை.கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடாத்தப்பட்ட மீனவர் கூட்டுறவு தினவிழாவில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது: மீன்பிடித் தொழில் வளர்ச்சியடையாமைக்கு வலை மற்றும் உபகரணங்கள் இன்மையும் காரணமாகும். சிறந்த மீன்பிடித் துறைமுகமோ அல்லது குளிரூட்டும் சாதனங்களோ இல்லாமையும் மீன்பிடித்தொழில் குன்றக் காரணமாகும். இக் குறைகளை அகற்றவேண்டியது அத்தியாவசியமானதாகும்.

வடமாகாணத்தில் 75 வீதமான மீன் பிடிக்கப்படுகின்றது. அதில் 25 வீதம் யாழ்ப்பாணத்தில் மட்டும் பிடிக்கப்படுகிறது. மீன்பிடித்தொழிலில் ஈடுபடுபவர்கள் 3/8 வலைகளை பாவிக்கக் கூடாது. இச் சிறிய வலைகளை உபயோகித்து வந்தால் எதிர்காலத்தில் தொழில்செய்யமுடியாத நிலை ஏற்படலாம்.

மீன்பிடித் தொழிலுக்கும் கமத்தொழில் கடன்கள் வழங்கப்படுவதுபோன்று கடன்கள் வழங்கப்படவேண்டும். உபகரணங்களும் வலைகளும்பெற கொழும்பிற்கே செல்லவேண்டியுள்ளது. பணத்தோடு கொள்முதலுக்கு செல்பவர் மீண்டும் உயிருடன் திரும்புவாரா என்றநிலை காணப்படுவதால் அருகில் பொருட்களை பெற்றுக்கொள்ளக்கூடிய நிலை ஏற்படவேண்டும்" என்றுர்.

யாழ். அரசாங்க அதிபர் லயனல் பெர்ணுந்தோ உட்படப் பலரும் உரையாற்றினுர். விழாவை முன்னிட்டு வள்ளமோட்டும் போட்டி நீச்சல்போட்டி என்பனவும் இடம்பெற்றன. (உ)

## துருக்கிக்கு அமெரிக்க ஆயுதத்தடை நீங்கும்?

வாஷிங்டன், ஜூலை. 26

துருக்கிக்கு எதிரான ஆயுத விநியோகத் தடையை ரத்துச் செய்யும் மசோதாவை அமெரிக்க செனட்சபை அங்கீகரித்துள்ளது.

இம்மசோதா அமெரிக்க செனட்டில் 15 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

செனட்சபையில் இம் மசோதா நிறைவேற்றப்பட்ட போதிலும், பிரதிநிதிகள் சபையில் இதற்குப் பலத்த எதிர்ப்பு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1974 ம் ஆண்டு சைப்பிரஸுக்குள் துருக்கி ஊடுருவல் நடத்தியதை அடுத்தே அமெரிக்கா துருக்கிக்கு ஆயுத விநியோகம் செய்வதை நிறுத்தியிருந்தது. (இ)

## கிருபளானி-சந்திரசேகர் சந்திப்பு

புதுடில்லி, ஜூலை. 26

ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் நேற்று ஆச்சார்யா கிருபளானியைச் சந்தித்து இன்றைய அரசியல் நிலை குறித்து ஆராய்ந்தார்.

40 நிமிட நேரம்வரை நடத்திய பேச்சுக்கள்பற்றிய விபரம் எதையும் திரு. சந்திரசேகர் வெளியிட மறுத்துவிட்டார். (இ)

## தமிழில் மாத்திரமே கையொப்பமிட வேண்டும்

### தமிழக அரசு ஊழியருக்கு உத்தரவு

சென்னை, ஜூலை, 26

தமிழ் நாடு அரசின் சகல ஊழியர்களும் இனிமேல் தமிழ் மொழியில்மட்டுமே கைச்சாத்திடவேண்டும் என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

1956-ம் ஆண்டு தமிழ் நாடு மொழிக் கொள்கைக்கு இணங்கவே இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசாங்க ஊழியர்கள் தமிழில்மட்டுமே கைச்சாத்திடவேண்டும் என உத்தரவிடப்பட்ட போதிலும் காசோலைகள், சம்பளப்பட்டியல்கள், மத்திய அரசுடன் கொள்ளும் தொடர்புக் கடிதங்கள் ஆகியவற்றில் ஆங்கிலத்தில் கைச்சாத்திடலாம் என்று அரசு அறிவித்துள்ளது.

தமிழ் தெரியாத ஊழியர்கள் தமிழ் மொழியைக் கற்று, அதற்கான தகுதிகாண் பரீட்சையில் சித்திபெறும் வரை இந்த உத்தரவிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. (இ)

### பாண்டிச்சேரி அமைச்சர்

# பெண் அதிகாரியின் கற்புக்கு பங்கம் ஏற்படுத்திஞராம்

## கமிஷன் விசாரணை நடக்கும்

புதுச்சேரி, ஜூலை. 26

பெண் அரசாங்க அதிகாரி ஒருவரைப் பலாத்காரம் செய்து, அவரது கற்புககுப் பங்கம் விளைவித்ததாக பாண்டிச்சேரி உள்துறை அமைச்சர் திரு. டி. இராமச்சந்திரனுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள்மீது கமிஷன் விசாரணை நடைபெறும் என்று தமிழ் நாடு கவர்னர் திரு. பிரபுதாஸ் பட்வாரி தெரிவித்துள்ளார்.

மாவட்ட நீதிபதி அல்லது அவருக்கு உயர்ந்த அந்தஸ்துள்ள ஒருவரின்முன் இந்த விசாரணை நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

# பொன்மலைப்படைப் பயிற்சியில் வி. பி.

பாரதமண்ணில் விமானம் மெதுவாக இறங்கி ஓடி நிற்கிறது.

மனத்தில் பழைய நினைவுகளும் புதிய சிந்தனைகளும் தோன்ற, பலகாலம் பிரிந்திருந்த ஆவலுடன் வி. பி. மெதுவாக இறங்குகிறுர். திருச்சி விமான நிலையம் வெகு சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

திரு. ரங்கநாதன் என்பவர் வி. பியை வரவேற்றுச் சென்று அவரது உறவினர் வீட்டில் அன்பாக உபசரித்துத் தமது அன்பை வெளிப்படுத்தியமை வி பி. யின் உள்ளத்தை மிகுந்த பரவசத்துக்குள்ளாக்கியது. அவர் செந்தமிழர் இயக்கக் கொழும்புக் கிளையுடன் நெருங்கிய உறவு வைத்திருப்பவர். இந்தியாவிற்குச் சென்று அங்கு தமது உறவினர் வீட்டில் தங்கியிருந்தார்.

அங்கிருந்து சென்னை புறப்படமுன்பு திருச்சியில் தாம் முன்பு சென்று உலாவிய பல இடங்களையும் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார் வி.பி.

சுமார் இருபத்தைந்து வருடத்திற்கு முந்திய நிகழ்ச்சிகள் அவரது உள்ளத்தில் அலைகளென மோதின.

கிருந்தபோது பலவிதமான அனுபவங்களும் போதிக்கப்பட்டன. அதாவது போர்க்காலத்தில் ஏற்படும் இக்கட்டான சந்தர்ப்பங்களில் சில சில செதிக்குறைவுகளைத் தாங்கிச் சமாளித்துச் செல்லும் பண்பும் போதிக்கப்பட்டது.

இத்தகைய பழைய எண்ணங்கள் வி. பி. நினைவில் நிழலாடின. அத்துடன் வாழ்வு பற்றிக் கூறிய ஒப்பற்ற லெனினின் தத்துவமும் அவர் எண்ணத்தில் மோதியது.

'அடிமைப்பட்ட மனிதனின் இறுதி விமோசனத்திற்காக எவன் தனது கடைசி மூச்சுவரை போராடி, பிறர் வாழத் தன்னை ஒப்படைக்கிருனே, அவனே ஒரு முழுமையான வாழ்வை வாழ்கிருன்' என்ற மாமேதை லெனின் கூற்றும், அதனை ஏற்று வாழ்ந்து, மறைந்த 'ஆசிய ஜோதி' அமரர் ஜவகர்லால் நேரு தமது 'வாழ்க்கைத் தத்துவம்' என்ற நூலின் இறுதியில் லெனினை நினைவு கூர்ந்து எழுதிய லெனின் வாழ்வுபற்றிய ஒப்பற்ற தத்துவமும், இவரது நெஞ்சில் நிழலாடி மறைந்தன.

வி. பி. யின் இந்திய பயண அனுபவங்களை

கேட்டு எழுதியவர்:

**இணுவை. ந. சண்முகப்பிரபு**

அவர் இந்தியாவிற்குக் கல்வி கற்கக் கிளம்பிய முதல் பயணம் அது. உலகின் அனுபவ முத்திரை பதியாத தூய்மை உள்ளத்தை மட்டும் கொண்டுவந்திறங்கிய அவருக்கு இந்தியாவே ஒரு புதிராக விளங்கியது. அப்போது திருச்சி விமானநிலையத்தில் அவர் வந்திறங்கிய சமயம் இந்திய கம்யூனிஸ்ட்கட்சியின் திருச்சிப்பகுதி தலைவரும், பொன்மலைத் தொகுதியின் பிற்கால எம். பி. யுமான திரு. நம்பியாருடன் சென்று தங்கினுர். அவரது ஞாபகமும் மனதுள் எழுந்தது. கல்லூரியில் அவர் படித்துக்கொண்டிருந்தசமயம், அங்குள்ள என். சி. சி. எனும் தேசிய படைபகர் குழுவில் இருவருடங்களாகச் சேர்ந்துழைத்து கட்டுப்பாடு, கடமையுணர்வு போன்ற நற்குணங்களைத் தன்னகத்தே வளர்த்துக்கொண்ட காலம் அது. அக்குழுவில் சேர்ந்து இவர் அணிவகுப்பு, போர்ப் பயிற்சிகள் போன்ற கடின பயிற்சிகளாலும், ஒரு தளபதிக்குரிய பயிற்சிகளிலும் ஈடுபட்டு மிகுந்த மனேதிடம், மதிநுட்பம், நினைத்ததைச் சாதிக்கும் திறன் ஆகியவற்றைத் தம்மிடையே வளர்த்துக்கொண்டார்.

அக்குழுவினர் ஒவ்வொரு மார்கழி மாதத்திலும் திருச்சியில் பொன்மலையில் தான் 'காம்ப்' (முகாம்) அமைத்துப் பல்வேறு பயிற்சிகளில் ஈடுபடுவதுண்டு. அப்போது தாம் அங்கு உல்வித்திரிந்து பயிற்சி பெற்ற இன்பமான நினைவுகள் அவர் மனத்தே தோன்றி அவரை மகிழ்வில் ஆழ்த்தியது. அத்தகைய ஒரு பாசறைவாழ்வு அவர் உள்ளத்துடன் ஒன்றியதாக அமைந்தது.

### கட்டுப்பாட்டுப் பண்பை வளர்த்த பயிற்சி

திருச்சியில் அன்று நடைபெற்ற படைப்பயிற்சி இவரிடத்தே கட்டுப்பாட்டை மட்டுமன்றி, ஒரு 'தலைவனுக்கு' அடங்கி, அவன் சொற்கேட்டு நடக்கும் பண்பையும் வளர்த்தது. அங்

### விவேகானந்தர் மீது பற்று

சுவாமி விவேகானந்தரிடத்தில் இளமையில் இவர் மிக்க பற்றுக்கொண்டவராக இருந்தார். இதற்கான காரணம் சிந்தனைக்குரியது. நரேந்திரரின் யோகம் பற்றிய கர்ம தத்துவம் இவருக்கு சிறுபராயத்தில் முழுமையாக விளங்கவில்லை. ஆனுல்பின்னர்அதனைப் பலமுறை படித்துத் தமது சிந்தனையை அதில் படரவிட்டார் வி. பி.

**பாரதத்தில் பன்னிருநாட்கள் (2)**

'கர்மயோகம்' என்ற பகுதியில் சுவாமி விவேகானந்தர் 'பிறருக்குத் தொண்டுசெய்வதே பிரதானம்', 'தவமிருப்பதைவிட மனிதருக்குத் தொண்டுபுரிவதே மேலானது' என்று கூறியுள்ள கருத்துக்கள் வி. பி. மனத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தின. 'கடவுள் இருப்பது மெய்யானுல், அந்த இறைவன் உணவின்றித் தவிக்கும் ஏழைகள் முன் உணவாகவே காட்சியளிக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்' என்ற கருத்துக்கள் வி. பி. யைச் சிந்திக்க வைத்தது.

இந்தியாவில் இவர் படித்த காலத்தில் அங்கு நிலவிய வறுமையையும் துன்பங்களையும் உணர்ந்தார். கோடிக் கணக்கான மக்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி இருக்க இடமின்றி நிலமே பாயாகவும், வானமே கூரையாகவும் கொண்டு தெருஓரங்களில், மர நிழல்களில் இருந்து படும் அல்லல் வாழ்வைக் கண்டார்.

அதேசமயம் ஒரு சிறு பகுதியினர் மிருந்த பணக்காரராகளாயும், செல்வம், செல்வாக்கு உடையவர்களாயும் இருப்பதைக்கண்டு மனம் மிக வருந்திஞர்.

அட்போதுதான் அவரது மனத்தில் மாமேதை மார்க்ஸ், லெனினின்கருத்துக்கள்மெல்ல மோதி உறவாடத் தொடங்

(5-ம் பக்கம் பார்க்க)

Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
3rd DIAMOND WEEK
Peter Fonda
DIAMOND
MERCENARIES

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
முத்துராமன்
சுஜாதா - பத்மப்பிரியா
உறவுசொல்லஒருவன்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். - லதா
நினைத்ததை
முடிப்பவன்
(புதிய- பிரதி கலர்)

## குழாய்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இப்போது வரலாற்றில் புதிய சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

திருமதி பிரவுணின் முட்டைக்கலத்தையும் அவரது கணவரின் தாதுவையும் எடுத்து பரிசோதனைக் குழாயில் கருக்கட்டவைத்த டாக்டர்கள் பின்அக்கருவை திருமதி பிரவுணின் வயிற்றில் கருப்பைக்கு வெளியில் குழந்தை உருவாக வழிசெய்தனர்.

இம்முறை மூலம் குழந்தை பிறக்கச்செய்வதுசாதாரணமாக நடைமுறைக்குவர இன்னும் பல ஆண்டுகள் செல்லும் என சாதனை நிலை நாட்டிய டாக்டர்கள் இருவரும் கருத்துத்தெரிவித்துள்ளனர்.

அக்குழந்தைக்கு உணவூட்டுவதே தமக்குப் பெரிதும் சோதனையாக இருந்தது என்றும் டாக்டர்கள் தெரிவித்தனர், (இ)

REGAL Daily at 4-45, 7- & 9-30 p. m only.
Jaffna
James Bolam, Rodney Bewes
in
THE LIKELY LADS
(color)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சாவித்திரி
நடித்த
படித்தால் மட்டும் போதுமா
(புதியபிரதி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
பேரும் புகழும்

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
(புத்தம் புதிய பிரதி)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி
செந்தாமரை

சாந்தி யாழ்நகர். போன்: 7642
தினசரி 5 காட்சிகள்
10-30, 2-30, 4-15, 7-00, 9-30
Carry on up the Jungle
(comedy)
28-7-78 முதல்
சினிமாஸ்கோப் தெய்வம் தந்த வீடு புதிய வெளியீடு

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஆனந்தன்
நானும் மனிதன்தான்

லிடோ (யாழ். நகர்) போன்: 7692
சிவகுமார், அல்கா
மதனமாளிகை

### "யாழ். மாவட்டத்தில்

# பஸ்சேவை சிறப்புற பிராந்திய சபை உதவும்"

## முகாமையாளர் தியாகராஜா நம்பிக்கை

(வண்ணார்பண்ணை)

''யாழ்ப்பாண மாவட்டத்தில் இனிமேல் பஸ் சேவைகள் படிப்படியாக சீராகவும், ஒழுங்காகவும் நடைபெறும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இதுவரை ஒரு சபையின் கீழ் இயங்கி வந்த இ. போ. ச. நிர்வாகம் பிராந்தியசபைகள் மூலம் பரவலாக்கப்பட்டுள்ளதே இந் நம்பிக்கைக்குக் காரணமாகும்''.

இவ்வாறு தீவுப்பகுதி பிரயாணிகள் சங்க புனரமைப்புப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய இ. போ. ச. யாழ். மாவட்ட பிராந்திய முகாமையாளர் திரு. என். தியாகராசா தெரிவித்தார்.

வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடந்த இக்கூட்டத்திற்கு தீவுப்பகுதி பிரயாணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. பி. ஜே. அலோசியஸ் தலைமை தாங்கினார்.

தீவுப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் உட்பட இ. போ ச. உத்தியோகத்தர்கள் பலரும் தீவுப் பகுதியின் ஏனைய பகுதிகளிலிருந்தும் பல நூற்றுக்கணக்கணக்கான பிரயாணிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திரு தியாகராசா தொடர்ந்து பேசுகையில், ''கடந்த காலங்களில் இ. போ. சபையின் முழு அதிகாரிகளும் கொழும்பில் மட்டும் ஒரு சபையில் இருந்து வந்ததால் எதற்கெடுத்தாலும் அங்கு செல்லவேண்டிய நிலை தான் இருந்தது. இதனால் யாழ். மாவட்ட பஸ் சேவைசீரற்றதாக விருந்தது 1978 யூலை 15ந்திகதிமுதல்பிராந்தியசபைகள் இயங்க ஆரம்பத்திலிருந்து எமது குறைகள் தீர்க்கும் அதிகாரங்கள் இச்சபைக்கு வந்துள்ளன. இதனால் எமது பஸ் சேவையில் புதிய திருப்பங்களை நாம் காணக்கூடிய வாய்ப்பும், வசதியும் ஏற்பட்டுள்ளது. போதிய பொறியலாளர்கள் இல்லாத குறை பஸ் வண்டிகளை சரியாக ஓடவிடுவதற்கு உதிரிப்பாகங்கள் இல்லாத குறைகள் இதுவரை இருந்து வந்தன. இப்பொழுது இக்குறைகள் படிப்படியாக தீர்க்கப்பட்டு வருகின்றன. அத்துடன் ஓரளவு புதிய பஸ் வண்டிகளையும் நாம் எடுக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

### கண்காணிப்பு

பஸ் நிலையத்தில் பஸ் சேவைகளையும், கியூவரிசைகளையும் சீராக நடைமுறைப்படுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும் பஸ் கியூ வரிசைக்கென ஒவ்வொரு பஸ் நிலையத்திலும் ஒவ்வொரு மேற்பார்வை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர். இந்த நியமனத்தால் பிரயாணிகளுக்கு பலதரப்பட்ட நன்மைகள் ஏற்பட இடமிருக்கின்றன.

### நேரசூசி மாற்றம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் சகல பாதைகளிலும் பஸ் சேவைகள் நேர ஒழுங்குடனும், சீராகவும் நடப்பதற்கு சகல பாதைகளுக்கும் நேர சூசி மாற்றம் செய்யப்படவுள்ளன. ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள பஸ் பிரயாணிகள் சங்கங்களின் ஆலோசனைகளை பெற்று இந்த நேரமாற்றங்கள் செய்யப்படும். இந்த மாற்றங்களால் பிரயாணிகளுக்கு இதுவரை இருந்து வந்த சிலகஷ்டங்கள் நீங்கும்.

தீவுப்பகுதி பஸ் சேவையில் உள்ள சில குறைபாடுகளை நீக்கும் வகையில் வேறு தொகுதிகளுக்கூடாகசெல்லும் சில பஸ்வண்டிகளையும் தீவுப்பகுதியூடாகசெலுத்தஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தற்பொழுது கிளிநொச்சி டிப்போ பஸ் குறிக்காட்டுவான் வரை சேவை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. இதுபோல் வேறு பஸ் வண்டிகளும் இப்படி செல்ல வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தீவுப்பகுதிக்கு தனியான பஸ் டிப்போ ஒன்றை நிறுவவேண்டுமென்ற கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது'' என்றார்.

தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில், இதுவரை வட பகுதியில் இ. போ. ச. சீராக இயங்க முடியாதிருந்ததால் பொதுமக்கள் நாளாந்தம் பாதிக்கப்பட்டனர். கடந்த காலத்தில் ஒரு தமிழ் அமைச்சர் இருந்தும் கூட இ. போ. சபையில் ஒரு தமிழர் தானும் இருக்கவில்லை.

யாழ். மாவட்டத்திற்கு இன்னும் குறைந்தது ஐம்பது புதியபஸ்வண்டிகள் அனுப்பப்பட்டால்தான் இன்றைய பிரயாணக் கஷ்ட நிலையில் மாற்றம் ஏற்பட முடியும். பஸ்களின் தொகை அதிகரிக்கப்படாவிட்டால் இந்த பஸ் சீர்கேட்டை மாற்ற முடியாது. இருபது வருட காலம் இங்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பஸ் வண்டிகள் கூட எங்களது தொகுதியில் சேவையில் ஈடுபடுகின்றன. தனியான பஸ் வண்டிகளுக்கு மேலும் ஒரு பஸ் வண்டியை சேவையில் ஈடுபடுத்தவேண்டும்'' என்றார்.

இக்கூட்டதைத் தொடர்ந்து தீவுப்பகுதி பிரயாணிகள் சங்க நிர்வாகிகள், உத்தியோத்தர்கள் தெரிவு நடைபெற்றது. தீவுப்பகுதியில் உள்ள பதின்மூன்று பஸ் பாதைகளிலிருந்தும் இந்த நிர்வாகசபைக்கு உறுப்பினர்கள் தெரியப்பட்டனர். பாடசாலை சேவையின் பிரதிநிதிகளாக இரண்டு அதிபர்களும் இச்சபையில் தெரியப்பட்டனர். (உ)

## பொன்மலை...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

சினை. உள்ளம் பொதுஉடைமைத் தத்துவத்தின் பால் மெதுவாக ஈர்க்கப்படலாயிற்று. சுரண்டப்படும் ஒரு சமுதாயம், அடக்கப்படும் ஒரு சமுதாயம் முதலாளித்துவ, நிலச்சுவாந்தார்களின் கைகளில் அகப்பட்டுச் சிக்கிச் சின்னபின்னப்படுவதை உணர்ந்தார். ஒருவன் கஷ்டப்பட்டு உழைக்கிறான், இன்னொருவன் சும்மாயிருந்து உறிஞ்சுகிறான். இது என்ன நீதி என்று அந்த உள்ளம் சிந்தித்தது. அதன் விளைவு...

1948-ல் இந்தியகம்யூனிஸ்ட் கட்சியின் சென்னைக் கிளையில் வி. பி. சேர்ந்தார்! முன்பே இலங்கையில்கம்யூனிஸ்ட்கட்சியுடன் தொடர்புடையவரெனினும் தீவிரமாக இயங்க வேண்டும் என்ற எண்ணம் அங்குதான் எழுந்தது ப. ஜீவானந்தம் தலைவர்களில் ஒருவராக இருந்தார். ஏ.எஸ். கேஜயங்கார் மாவட்டக்காரியதரிசியாக இருந்தார். அவர்களது தொடர்பால் இவரது உள்ளத்தில் பொதுவுடைமைக்கருத்துக்கள் விதைக்கப்பட்டன. அவை இன்றுபெரு விருட்சமாக வளர்ந்து ஈழம் வாழ் தமிழ்மக்களின் நிழல் விருட்சமாக அமைந்து குளிர்ச்சியைத் தருகிறது.

அன்று இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்துழைத்த இவர், யாழ்ப்பாணத்துக்கு விடுமுறைக்கு வந்த போதெல்லாம் தமது நண்பர்களிடையே பொதுவுடைமைக் கருத்துக்களை அள்ளிச் சொரிந்தார். அதன் விளைவாக ஜன நாயக வாலிபர் சங்கக்கிளை என்ற அமைப்பை அன்றுதமது ஊரில் உருவாக்கினார்.

(தொடரும்)

### வட்டு. ஆசிரியர் இடமாற்றம்:

## எம். பிக்கு ஆலோசனைகூற மூவர்குழு நியமனம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை தொகுதியில் ஆசிரியர்களின் இடமாற்றம்பற்றி வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி.க்கு ஆலோசனை கூறுவதற்கு மூன்றுஉறுப்பினர்களைக் கொண்ட விசேட குழுவொன்றை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வட்டுக்கோட்டைத்தொகுதிக்கிளை நியமித்துள்ளது.

அண்மையில்மேற்படி சங்கக் கிளையின் நிர்வாக சபைக் கூட்டம் சித்தன்கேணியில் சங்கத் தலைவர் திரு. க. பரமலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது இக்குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவில் சங்கத் தலைவர் திரு. க. பரமலிங்கம், செயலாளர் திரு. வி. சிவகுருநாதன், உபதலைவர் திரு. வே. தம்பையா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (உ)

## இல்லப் போட்டி

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை இல்ல வருடாந்த மெய்வல்லுனர் போட்டி பாடசாலை அதிபர் திருமதி பி. சிவானந்தராசா தலைமையில் நடைபெற்றது. இப்போட்டியில் பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் கலந்து கொண்டார். மெய்வல்லுனர் போட்டியில் முதலாவது இடத்தை பேஜ் இல்லமும், இரண்டாவது இடத்தை பிக்னல் இல்லமும், மூன்றாவது இடத்தை ஸ்கொட் இல்லமும் பெற்றன.

வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் வழங்கினார். (இ)

(உருத்திரபுரம்)

கிளிநொச்சி கண்டிவீதியில் உள்ள ஒரு மரத்தின் கீழ் காணப்பட்ட அனாதரவான சடலமொன்று அரசாங்கச் செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

மேற்படி சடலத்தை கண்டி வீதியில் உள்ள மரத்தின்கீழ் இருந்து கிளிநொச்சிப் பொலிசார் கண்டெடுத்து கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

மேற்படி நபருக்கு உறவினரோ, நண்பரோ இல்லாத நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்பட்டது. (உ)

## மக்கள் மேயர்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்குப் பணியாற்றினார்

தன்னலமற்ற தமது உயரிய சேவையினால் மக்களின் நல்லாதரவைப் பெற்ற அவ்விளம் சட்டத்தரணி, முதன் முதல் மிக இளம் வயதில் மாநகரசபை அங்கத்தவர் ஆகி தனது துடிப்புமிக்க நடவடிக்கைகளினாலும், சிந்தனைத் திறனாலும், மற்றைய அங்கத்தவர்களையும் தனது ஆதரவாளர்களாக்கி, 1958ம் ஆண்டு யாழ்ப்பாண வரலாற்றிலேயே வயது குறைந்த மாநகரசபை முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார். தன்னை முதல்வராக்கிப் பெருமைப்படுத்திய யாழ்நகர மக்களின் அறிவுப் பசியைத் தணிப்பதற்காக, யாழ்நகரிலே ஓர் அழகிய பொதுசன நூல் நிலையத்தைத் திறந்து சாதனையை நிலைநாட்டினார்.

34 வது வயதினில் யாழ். மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதியாக 1960ம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்டார். பின்பு அதே ஆண்டு பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டபோது, இரண்டாம் தட்வையாகவும் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டுத் தான், உண்மையான மக்கள் பிரதிநிதி என்பதை வெளிப்படுத்தினார். நாடாளுமன்றப் பிரதிநிதியாகத் தொடங்கப்பட்ட தனது வாழ்க்கைப்பாதையிலே யாழ். நகருக்கு ஒரு சிறந்த புகையிரதநிலையத்தையும் அரசாங்க செயலகத்தையும், வீட்டுத் திட்டங்களையும் உருவாக்கிப் பெருமையடைந்தார். அதுமாத்திரமன்றி அக்கால கட்டத்தில் மூன்றுமுறை லண்டனிலும், பெல்கிறேட்டிலும் நடைபெற்ற சர்வதேசப் பாராளுமன்றக் கூட்டங்களிலும், பொதுநல அமைப்பு நாடுகளின் கூட்டங்களிலும் பங்குபற்றி இலங்கையின் புகழை வெளிநாட்டிலும் நிலைநாட்டினார்.

தேசிய அரசியலிலே தமது பங்கைச் செலுத்திய அதே வேளையில் மாநகரசபையிலே அற்புத சாதனைகளை நிலைநாட்டிக் காட்டினார். பிணியால் வாடிய ஏழை மக்களின் நலனுக்காக வட்டாரங்கள் தோறும் இலவச மேலைத்தேச -ஆயுர்வேத வைத்தியசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. நகரத்தின் முக்கிய இடங்களில் கிளை நூலகங்களும், குடும்ப நலத் திட்டங்களும், ஞாயிறு சந்தைகளும் வெற்றிகரமாக அமுல்செய்யப்பட்டன யாழ் நகரின் கேந்திரநிலையத்திலே அழகிய நவீன சந்தையொன்று கட்டிமுடிக்கப்பெற்றது. மக்களின் உல்லாசத்திற்கு ஓர் பெரும் விளையாட்டரங்கையும் ஏழைகளின் வரப்பிரசாதமாக ஒரு கல்யாண மண்டபத்தையும் உருவாக்கி மக்களை மகிழ வைத்தார். தமிழ் அறிஞர்களுக்கும், புலவர்களுக்கும் தமிழ்மக்கள் சாற்றிய நன்றிக் கடனின் செயற்பாடாக, நகரில் அழகிய சிலைகளை நிர்மாணித்துப் பெருமையடைந்தார்.

தமது சாதனைகளால் மக்கள் சந்தோஷமாக வாழ்வு நடாத்துவதைக் கண்ணுற்று, வெற்றிப் பெருமிதத்திலே திளைத்துப் பவனிவந்தபோது அவர் அமரரானார். நன்றியுள்ள சமுதாயம் உள்ளவரை அவர் நாமம் நிலைக்கும் என்பதில் ஐயமில்லை.

OMAX
QUALITY WATCHES

பஸ் வேலைநிறுத்தத்தின்போது

# சாவகச்சேரி எம்.பி. நவம் இறுதிவரை நின்று கவனித்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடந்த பஸ் ஊழியர் வேலைநிறுத்தத்தின்போது சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் வந்து இறுதிவரை அங்குநின்று நிலைமையை நேரில் பார்வையிட்டார்.

திரு. நவரத்தினம் 5 மணியளவில் பஸ் நிலையக் காரியாலத்தைவந்தடைந்ததும் மாணவர்களும் ஊழியர்களும் அவரை உள்ளே அழைத்துச் சென்றனர். அவர் இ. போ. ச. உத்தியோகத்தர்களுடனும், ஊழியர்களுடனும் சிறிதுநேரம் ஆலோசனை செய்தார். வெளியில் நின்ற மாணவர்கள் விசாரணை முடிவு தெரியும்வரை பஸ்ஸை ஓட விடமாட்டோம் எனக் கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.

### மாணவர் பிரதிநிதிகள்

திரு. நவரத்தினம் வெளியில் நின்ற மாணவர்கள் சார்பில் 5 பிரதிநிதிகளை உள்ளே விடுமாறு அழைத்து அவர்களுடனும் பஸ்ஊழியர் பிரதிநிதிகளுடனும் நிலைமை பற்றி ஆராய்ந்தார்.

பஸ்காரியாலய வாசலில் இரு இளைஞர்கள் காரியாலயத்திற்குள் செல்ல முயற்சி எடுத்துக்கொண்டிருந்த மாணவர்களைக் கட்டுப்படுத்திக்கொண்டிருந்தனர்.

பஸ் ஊழியர் பிரதிநிதிகளே வேலைநிறுத்தப்பற்றி இறுதி முடிவு எடுப்பதென்றும், அன்றைய தினம் பஸ்சேவை நடத்துவதில்லையென்றும், பஸ்களை கோண்டாவில் டிப்போவிற்கு கொண்டுசெல்வதென்றும் முடிவுசெய்யப்பட்டது. இதனை மாணவர்கள் பிரதிநிதிகளும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

### அமைதியாகக் கலைந்தனர்

இதன்பின் 6-30 மணிபோல் பஸ்கள் ஒவ்வொன்றாக கோண்டாவில் டிப்போவிற்குப் புறப்பட்டது. பஸ்நிலையத்தில் நின்ற மாணவர்களும் அமைதியாக அவ்விடத்தை விட்டுக் கலைந்துசென்றனர். பஸ்நிலையத்தைச் சுற்றியுள்ள கடைகள் யாவும் பூட்டப்பட்டன

சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் இறுதிவரை அங்கு நின்று நிலைமையை அவதானித்தார். பஸ் நிலையத்திலிருந்து சகல மாணவர்களும் பிரயாணிகளும் பஸ்களும் சென்றபின்பே அவர் சென்றார். அவருடன் யாழ். வளாக மாணவர் மன்றத் தலைவர் வ. ஜ. ச. ஜெயபாலனும் பஸ் நிலைய உத்தியோகத்தர்களும நின்று அவதானித்துக் கொண்டிருந்தனர்.

பிற்பகல் பொலிஸ் நிலையத்திற்கு சாரதி சோமசுந்தரத்துடன் யாழ். வளாக மாணவர் சங்கத்தலைவர் ஜெயபாலனும், பஸ்நிலைய பதல் பொறுப்பதிகாரி திரு பாக்கியநாதனும் சென்றனர். உதவி பொலிஸ் அதிபர் திரு. அனந்தராஜா வாக்குமூலம் பதிவு செய்வதற்கான ஏற்பாடடை செய்தார்.

சாட்சிகளாக ஆரியகுளம் சந்திக்கருகில் உள்ள சைக்கிள் கடையில் பணியாற்றும் ஒருவரையும், சிகை அலங்கரிப்பு நிலையத்தில் பணியாற்றும் ஒருவரையும் திரு. ஜெயபாலன் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். அதன்பின் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது. (க)

## 15 கிராம சேவையாளர் புதிய நியமனம்

(வண்ணார்பண்ணை)

யாழ். மாவட்டத்தில் காலியாக இருக்கும் 17 கிராம சேவையாளர் பிரிவுகளுக்குப் புதிய கிராமசேவையாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கென 15 புதிய கிராம சேவையாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற்கான 15 புதிய நியமனங்களின் பெயர்ப் பட்டியல், பொது நிர்வாக அமைச்சிலிருந்து யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேலும் சிலரது புதிய நியமனப் பட்டியல் அனுப்பப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது.

ஊர்காவற்றுறைத் தொகுதியிலிருந்து நான்கு பேர் புதிய நியமனத்தில் இடம்பெற்றுள்ளனர். தீவுப்பகுதியில் காலியாகவுள்ள நான்கு இடங்களுக்கும் இவர்கள் நியமிக்கப்படலாமெனத் தெரியவருகின்றது.

கடந்த அரசின் பதவிக்காலத்தில் நியமனம்பெற்ற 17 கிராம சேவையாளர்கள் புதிய அரசினால் வேலைநீக்கஞ் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (அ)

## "தொழிலாளர் பிரச்னைகளை இலக்கியம் பிரதிபலிக்கவேண்டும்"

### கல்வித்திணைக்கள இலக்கியமன்றக் கருத்தரங்கில் விரிவுரையாளர்

(யாழ்ப்பாணம்)

"சமூகத்தில் வாழும் பல்வேறு வர்க்கத்தினரிடையே கூடுதலாக மத்திய வகுப்பாளரே இலக்கியப் படைப்புக்களை வாங்கி வாசிக்கக்கூடிய நிலையில் உள்ளனர். அவர்களுக்கேற்றவாறு இலக்கியங்கள் படைக்கப்படும் ஒருநிலை உளது. ஆனால் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் சாதாரண மக்கள் தொழிலாள, விவசாயிகளின் பிரச்னைகளை விளக்கிக்காட்டும் இலக்கியங்கள்தான் அவசியமானது, அப்படியான இலக்கியங்களை மத்திய வகுப்பினர் படித்து அவர்கள் ஊடாக சாதாரண மக்களைச் சென்றடையக்கூடிய மனப்பக்குவம் மத்திய வகுப்பாளருக்கு ஏற்படவேண்டும்"

இவ்வாறு பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. அ. சிவராஜா கல்வித் திணைக்கள தமிழ் இலக்கிய மன்றத்தினால் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் "மத்திய வகுப்பாளரும் தமிழிலக்கியமும்" என்னும் தலைப்பில் பேசும்போது கூறினார். இக்கருத்தரங்கு, நிர்வாக அதிகாரி ஏ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில், மத்திய வகுப்பினரிடையே தமிழிலக்கியங்களை தொடர்புபடுத்தி வகைப்படுத்தும் பொழுது, பொழுதுபோக்குக்காக இலக்கியம் படைப்பவர்கள், பேருக்கும், புகழுக்கும் இலக்கியம் படைப்பவர்கள். சாதாரண விவசாய, தொழிலாளர் பிரச்னைகளை எழுப்பி அவர்கள் ஊழல்களை மக்கள் மத்தியில் கொண்டுவந்து மக்கள்முன் வைக்கவேண்டுமென்று இலக்கியம் படைப்பவர்கள் என வகைப்படுத்திப் பார்க்கலாம். இவ்வகையில் கடைசி வகுப்பாரே உண்மையான இலக்கியம் படைப்பவர்களாகவும், இலக்கியத்திற்கு தொண்டு செய்பவர்களாகவும் இருந்துவருகிறார்கள். இலக்கியத்தை எப்பொழுதும் மத்திய வகுப்பினர் தனது ஆளுமை, அறிமுகம், பெயர், புகழுக்காக தன்வசப்படுத்திவிடக்கூடாது." என்றார்.

யாழ். வளாக விரிவுரையாளர் திரு. மு. நித்தியானந்தன் "கலைஞனும் சந்தையும்" என்னும் தலைப்பில் பேசுகையில்

"கலைஞன், சுதந்திரமுடைய உற்பத்தியாளருக்கும், சுயநலக் கண்ணில்லாத நுகர்வோருக்குமிடையில் ஏற்படும் வியாபாரமான சந்தையில் தான் தனது சுய உருவத்தைக் காட்டி, ஆச்சரியமான கலையாகத் தோற்றமளிக்கும். அக்கலைகளை ஆக்கிய உற்பத்தியாளனின் மனநிலை, திறமை, சுதந்திரமான ஆக்கம் என்பனவற்றை வெளிப்படுத்தியதாக இருக்கும். நுகர்வோரினதோ அல்லது சந்தையினதோ நிலையை அறிந்து, வியாபார நோக்கில் உற்பத்தியாகும் கலைகளினால் சமூகத்திற்கோ அல்லது இலக்கியத்திற்கோ அவன் தொண்டு செய்யமுடியாது.

"முதலாளித்துவ சமுதாயத்தில் கலைகள் அந்நியமயமாக்கப்படுவது எதிர்க்கப்படவேண்டியுள்ளது. தஞ்சாவூர்க் கோயிலை எத்தனையோ சிற்பிகள், கைவண்ணம் தேர்ந்த கலைஞர்கள் சிந்தித்துத் தமது திறமையால் கட்டினார்கள். ஆனால் புகழோ இராஜராஜசோழனைச் சார்ந்தது, இந்நிலையில்லாது, கலைதிறமை படைத்தவனுக்கே புகழேற்படக்கூடிய சந்தர்ப்பம் கலைக்கு ஏற்படவேண்டும்" என்றார்.

மன்றச் செயலாளர் செல்லையா மெற்றுஸ்மெயில் நன்றி கூறினார். (கெ-உ)

## இன முழக்கம் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழ் இலக்கியக் கழகம் நடத்தும் 'இன முழக்கம்' 22வது ஆண்டு மலர் வெளியீட்டு விழா, இன்று மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது.

விழாவுக்கு முத்தமிழ்ச் செல்வர் திரு.அ. பொ. செல்லையா தலைமைவகிப்பார். மங்கல விளக்கை யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் ஏற்றிவைப்பார். வரவேற்புரையை திரு. மு. பொ. வீரவாகு நிகழ்த்துவார்.

மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரை, செந்தமிழர் இயக்கச் செயலாளர் திரு. வ. பொன்னம்பலம், இ. தி. மு. க. முன்னாள் செயலாளர் திரு. ஏ. இளஞ்செழியன் ஆகியோருடன் மற்றும் பலர் உரை நிகழ்த்துவர். (கெ)

## நூற்றாண்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு விழாப் போட்டி முடிவுகள், மாணவ சமுதாயத்தில் பெரும் ஆர்வத்தையும், அறிவுரையையும் ஏற்படுத்தியிருப்பதாகக் கூட்டத்தில் பலர் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். போட்டி அமைப்பாளர் திரு. வி. சுப்பிரமணியத்துக்கும், அவருடைய உப குழுவுக்கும் கூட்டத்தில் பாராட்டு வழங்கப்பட்டது. (அ)

குப்பிழானில்

## 'அமிரு'க்கு வரவேற்பு விழா இராசுவும் கலந்துகொள்வார்

(யாழ்ப்பாணம்)

தமிழர்விடுதலைக் கூட்டணிச் செயலதிபரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. ஏ.அமிர்தலிங்கத்திற்கு த. வி. கூட்டணியில் குப்பிழான் கிளையினர் மாபெரும் வரவேற்பு ஒன்றினை நாளை வெள்ளிக்கிழமை இரவு அளிக்கவிருக்கின்றனர்.

கிளைத்தலைவர் திரு க. பொ நடனசிகாமணி தலைமையில் குப்பிழான் விக்னேஸ்வர வித்தியாசாலை முன்றலில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் மானிப்பாய் எம். பி. திரு.வி. தர்மலிங்கம் குத்துவிளக்கேற்றி வைப்பார்.

மட்டக்களப்பு முதல்எம்.பி. திரு. செ. இராசதுரை உட்பட ஏனைய தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. க்களும், செந்தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலமும் இவ் விழாவில் உரையாற்றுவர். (க)

## கூட்டணியின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய அரசுப் பேரவையில் நடைபெறும்போது தமிழர் விடுதலைக் கூட்டணி அதில் பங்குபற்றாது என்று தெரிகிறது.

விவாதம் பேரவையில் ஆரம்பிக்கும்போது தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தமது நிலைகுறித்து விளக்கமான அறிக்கை ஒன்றை வெளியிடுவார் என்றும் தொடர்ந்து நடைபெறும் விவாதத்தில் தமிழர் கூட்டணி கலந்துகொள்ள மாட்டாது என்றும் தெரிகிறது. (ம-இ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanadu, Post Box No: 49, Jaffna - Telegram: Eelanadu - Telephone: 389 - Registered as a News paper in Sri Lanka.